0003

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

SNP 8334/ESP2134 – விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 03.09.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

1. பொருத்தமான உதாரணங்களை முன்வைத்துப் பின்வரும் பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.
    - குறைபாடு (Impairment)
    - இயலாமை (Disability)
    - ஊனமுற்றநிலை (Handicap)
2. இயலாமையுடைய பிள்ளைகளுக்கான ஐக்கிய அமெரிக்க தேசிய பரப்புதல் மையத்தின்படி ( U.S National Dissemination Centre for Children with Disabilities) கல்விச் சூழலில் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களை விவரிக்கப் பயன்படுத்தப்படும் பதங்களை பெயரிடுக.
3. டவுன் சிண்ட்ரோம் (Down Syndrome) உள்ள பிள்ளைகளின் **ஐந்து (5)** பொதுவான பண்புகளைக் குறிப்பிடுக.
4. ஆரம்பப் பிரிவு வகுப்பறையில் உள்ள மாணவர்களிடையே அடையாளம் காணக்கூடிய **ஐந்து (5)** உடல் நலக்குறைபாடுகளைப் (Health Impairment) பட்டியலிடுக.
5. அறிவுசார் குறைபாட்டுடன் (International Impairment) தொடர்புடைய **நான்கு (4)** நிலைமைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றை' விளக்குக.
6. மீத்திறன் உள்ள பிள்ளைகளின் (Gifted Children) **ஐந்து (05)** கற்றற் பண்புகளைக் குறிப்பிடுக.
7. உங்கள் சொந்த மொழிநடையில் குறிப்பான கற்றல் இயலாமை (Specific Leaning Disabilities) என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக.
8. செவிப்புலப் பிரச்சினையின் பொதுவான வகைகளைப் பட்டியலிட்டு அவற்றில் **ஒன்றை (1)** விளக்குக.

(8X 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

அ. ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனங்கள் (Autism Spectrum Disorders) உள்ள மாணவர்களை ஒரு ஆசிரியரால் எவ்வாறு அடையாளம் காண முடியும் என்பதை விளக்குக.

(8 புள்ளிகள்)

ஆ. ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனங்கள் (Autism Spectrum Disorders) உள்ள மாணவர்களுக்கு உள்ளடங்கல் வகுப்பறையொன்றில் கல்வி உதவிகளை எவ்வாறு வழங்கலாம் என்பதை விவரிக்குக.

(12 புள்ளிகள்)

10.

அ. உங்கள் சொந்த மொழிநடையில் அறிவுசார் குறைபாடு என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.

(8 புள்ளிகள்)

ஆ. “ஒரு நபருக்கு அறிவுசார் குறைபாடு உள்ளதா என்பதை தீர்மானிப்பதில் நுண்மதிஈவுப் புள்ளிகள் அடிப்படையான அம்சம் என்பதை நினைவிற்கொள்வது முக்கியம். தகவமைப்பு நடத்தைத் திறன்களில் உள்ள குறிப்பிடத்தக்க வரையறைகளும் இதில் கவனிக்கப்படுகின்றது”

i. தகவமைப்பு நடத்தை தொடர்பான தகவமைப்பு திறன்களை விளக்குக.

(6 புள்ளிகள்)

ii. கல்வித் துறையில் அறிவுசார் குறைபாடு கண்டறியப்பட்ட மாணவர்களுடன் வெற்றிகரமான கற்பித்தலை எளிதாக்குவதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய முறைகளை ஆராயுங்கள்.

(6 புள்ளிகள்)

11. “பெரும்பாலான பிள்ளைகளின் பேச்சு மற்றும் மொழி என்பன மிகவும் இயல்பாகவும் கணிக்கக்கூடிய வரிசைமுறையிலும் விருத்தியடைகின்றன”

அ. பேச்சு ஒழுங்கீனத்திற்கும் மொழி ஒழுங்கீனத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விவரிக்குக.

( 8 புள்ளிகள்)

ஆ. பேச்சு மற்றும் மொழி ஒழுங்கீனங்கள் தொடர்பான சமூக-மனவெழுச்சிச் சிக்கல்களை விளக்குக.

( 4 புள்ளிகள்)

இ. பாடசாலை வயதுப் பிள்ளைகளைப் பாதிக்கக்கூடிய **நான்கு (04)** வகையான பேச்சு ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு, நீங்கள் குறிப்பிட்ட பேச்சு ஒழுங்கீனங்களில் **ஒன்றின் (1)** பண்புகளை விளக்குக.

( 8 புள்ளிகள்)

12. “கவனிக்கக்கூடிய அல்லது அளவிடக்கூடிய உடலில் அமைப்பு உடல் அறிகுறிகள் எவையும் தென்படாதவிடத்து, நடத்தை ஒழுங்கீனங்களைக் கண்டறிவது கடினமான ஒரு காரியமாகின்றது.”

அ. மூன்று வகையான நடத்தை ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு, அவ்வொழுங்கீனங்கள் உள்ள பிள்ளைகளின் நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் பொழுது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்களை விளக்கவும்.

( 8 புள்ளிகள்)

ஆ. சிறந்த வகுப்பறை நிருவாகத்திற்காக மேற்கூறிய சவால்களை சமாளிப்பதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய உத்திகளை விவரிக்குக.

( 12 புள்ளிகள்)

13.

அ. மாற்றுத்திறனாளிகளுக்கான சர்வதேசக் கல்விச் சட்டத்தின் படி USA- IDEA (1990) பின்வரும் விதிமுறைகளை வரைவிலக்கணப்படுத்துக.

- செவிப்புலன் குறைபாடு
- செவிப்புலன் இழப்பு

( 8 புள்ளிகள்)

ஆ. செவிப்புலன் குறைபாடுள்ள குழந்தைகளிடம் நீங்கள் அவதானிக்கக்கூடிய நடத்தை மாற்றங்கள் மற்றும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அவர்களுக்கு உதவ நீங்கள் பயன்படுத்தும் உத்திகள் யாவை என்பதை ஆராய்க.

( 12 புள்ளிகள்)

14.

அ. i. ஒரு ஆசிரியராக உங்கள் வகுப்பறையில் கணிதம்சார் கற்றல் இயலாமையினால் பாதிக்கப்பட்ட குழந்தையை எவ்வாறு அடையாளம் காண்பீர்?

ii. மேலே குறிப்பிட்ட மாணவர்களிடையே நீங்கள் காணக்கூடிய முக்கிய பண்புகளை விளக்குக.

( 8 புள்ளிகள்)

ஆ. i. கணிதம்சார் கற்றல் இயலாமை உள்ள மாணவர்களுக்கு நீங்கள் கற்பிக்கும் போது எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

ii. அத்தகைய மாணவர்களுக்காகச் செயற்படுத்தும் வகையில் உங்கள் தலையீட்டு திட்டத்தை விளக்குங்கள்.

( 12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*